செய்தி வெளியீடு எண்:544 நாள்:22.11.2016

**மாங்காடு, அருள்மிகு காமாட்சி அம்மன் மற்றும் அருள்மிகு வைகுண்டப் பெருமாள் வகையறா திருக்கோயில்கள் – திருப்பணி மற்றும் திருக்குடமுழுக்கு**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் எஸ்.இராமச்சந்திரன் ஆய்வு**

சென்னை அருகேயுள்ள புகழ்பெற்ற அம்மன் திருத்தலமான அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில் ஓர் முக்கிய பிரார்த்தனை தலமாகும். இத்திருக்கோயில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் சோழர்களால் கருவறை மற்றும் அர்த்த மண்டபம் அமைக்கப்பட்டது, பின் வந்த விஜயநகரபேரரசுகளால், மகா மண்டபமும் சபா மண்டபமும் கற்றளி மண்டபமாக அமைக்கப்பட்டது.

இத்தலத்தில் அன்னை அருள்மிகு காமாட்சி அம்மன் சிவபெருமான் ஆணைப்படி பஞ்சாக்கினியில், இடது கால் கட்டைவிரல் நுனியில் நின்று கடுந்தவம் புரிந்தாள். அன்னையின் தவ அக்கினி வெப்பத்தால் இப்பூமி வெப்பமானது. அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ அல்லலுற்றன. அப்போது காலடியில் தோன்றிய ஞானி ஸ்ரீஆதி சங்கரர் இத்தலத்திற்கு வருகை தந்தார். அன்னையின் ருத்ரம் தணியும் வண்ணம் சிவசக்தி இருப்பிடமான, அபூர்வமான அர்த்தமேரு எனும் 43 திரிகோணங்கள் கொண்ட ஸ்ரீசக்கரத்தை பிரதிஷ்டை செய்தருளினார். இவ்வாலயத்தில் அர்த்தமேரு ஸ்ரீசக்கரமே மூலஸ்தானமாக இருப்பது சிறப்பாகும். அர்த்தமேரு மூலிகைகளால் ஆனதால் அபிஷேகம் கிடையாது. குங்கும அர்ச்சனை விசேஷமானது, ஜவ்வாது, சந்தனம், புனுகு போன்ற வாசனை திரவியங்கள் சாற்றப்படுகின்றன. பஞ்சலோகத்தாலான ஸ்ரீகாமாட்சி அம்மனுக்கு அபிஷேக அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாலயத்தில் காமிகஆகம முறைப்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன. அம்மன் பிரார்த்தனை தலமான இத்திருக்கோயிலில் "ஆறுவார வழிபாடு" பக்தர்களால் பெரிதும் கடைபிடிக்கப்படுகிறது. வாரத்தில் ஏதேனும் ஒருநாளில் எலுமிச்சை கனியுடன் அம்மனை தரிசித்து, பின்னர் அதே கிழமைகளில் தொடர்ந்து ஆறு வாரங்கள் (அதாவது ஒரு மண்டலம்) வழிபட்டால் நினைத்த காரியம் கைக்கூடுகிறது.

இத்திருக்கோயிலின் முந்தைய மஹா கும்பாபிஷேகம் 03.06.2001 ல் நடைபெற்றுள்ளது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **அம்மா** அவர்களின் நல்லாசியுடன் இத்திருக்கோயிலில் ஏழுநிலை இராஜகோபுரம் பழுதுபார்த்து பஞ்சவர்ணம் தீட்டும் பணி ரூ.17,00,000/– செலவிலும், பக்தர்களின் நலன் கருதி பக்தர்களின் வசதிக்கேற்றவாறு ஒழுங்குவரிசை மண்டபம் ரூ.64,00,000/– செலவிலும் கட்டப்பட்டுள்ளது. மூலவர் காமாட்சி அம்மன் விமானம், அருள்மிகு தபசு காமாட்சி விமானம், அருள்மிகு வரசித்தி விநாயகர் விமானம் முதலான விமானங்கள் பஞ்சவர்ணம் தீட்டும் பணி ரூ.4,00,000/– செலவிலும், அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலின் சுற்றுப் பிரகார மண்டபம் வர்ணம் தீட்டும் பணி ரூ.18,00,000/– செலவிலும் மேலும் பிரகாரமண்டபத்தில் தட்டோடு பதிக்கும் பணி ரூ.22,00,000/– செலவிலும் மற்றும் திருக்கோயில் அலுவலகம், கட்டணச்சீட்டுக்கள் விற்பனை நிலையம், திரமடப்பள்ளி, தங்கத்தேர் நிறுத்தும் அறை, திருமதிற்சுவர் மற்றும் கருங்கற்கள் தரைத்தளம் அமைக்கும் பணி முதலான பணிகளுக்கு ரூ.16,00,000/– செலவில் செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் சுமார் 1 கோடியே 41 இலட்சம் செலவில் பழுது பார்த்து திருப்பணி நிதியின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மூலவர் அருள்மிகு காமாட்சி அம்மன் விமானத்தில் உள்ள ஐந்து செப்பு கலசங்களும் அருள்மிகு தபசு காமாட்சி அம்மன் விமானத்தில் மூன்று செப்பு கலசங்களும், அருள்மிகு வரசித்தி விநாயகர் விமானத்தில் ஒரு கலசமும் ஆகிய 9 கலசங்களுக்கு சுமார் ரூ.24,00,000/– செலவில் உபயதாரர்கள் மூலம் தங்கரேக் ஒட்டப்பட்டு நிறுவப்பட உள்ளது. மேலும் அர்த்தமண்டபத்தில் உள்ள கதவுகளுக்கு உபயதாரர்மூலம் அஷ்டலட்சுமி உருவம் பொறிக்கப்பட்டு வெள்ளி நகாஸ் வேலைப்பாடுகளுடன் கொண்ட வெள்ளிக் கதவுகள் சுமார் ரூ.26,00,000/– மதிப்பில் பொருத்தப்பட உள்ளது. இத்திருக்கோயிலின் பழக்க வழக்கங்களின்படியும், ஆகமவிதிகளின்படி ஆலய அர்ச்சகர் குறிப்பிட்ட நன்னாளான 04.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 7.32. மணிக்கு மேல் 9.21 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற அம்மனுக்கு 33 குண்டங்கள் கொண்ட உத்மபஷ்ச யாகசாலைகள், பரிவார சன்னதிகளுக்கு தனி யாகசாலையும் அமைக்கப்பட்டு வருகிறது.

மஹாகும்பாபிஷேகத்தில் ஆன்மிகப் பெரியோர்கள், பொதுமக்கள் வசதிக்காக காவல்துறை, உள்ளாட்சித்துறை, போக்குவரத்துறை, சுகாதாரத்துறை, மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து பணியாற்ற முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று (22.11.2016) மஹாகும்பாபிஷேக திருப்பணி ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முகமணி, திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பழனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வாலாஜாபாத் கணேசன், பரம்பரை தர்மகர்த்தா மணலி.ஆர்.சீனிவாசன், துணைஆணையர் / செயல்அலுவலர் திரமதி.இரா.வான்மதி மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**